1972 டிசம்பர் 9]

Old manuscripts in Saraswathi Mahal, Thanjavur.

*102— *Q*. THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that research is conducted on the old manuscripts found in Saraswathi Mahal, Thanjavur.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் உள்ள பழஞ் சுவடிகளை ஆராய்ச்சி செய்ய தமிழக அரசு குழு ஒன்றை நியமித்துள்ளதா? அல்லது, மத்திய அரசு நியமித்துள்ளதா ? அப்படி நியமிக்கப்பட்டிருந் தால், அந்தக் குழுக்களில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கே பல்வேறு மொழிகளில் பல்வேறு ஆராய்ச்சிப் பண்டிதர்களும் புலவர்களும் இருந்து சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால், யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற குறிப்புகள் இல்லை. அந்த நூல் நிலையத்தில் கிட்டத்தட்ட நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகளைச் சார்ந்த பழம் பெரும் சுவடிகளும், ஏடுகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் உதவி செய்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, sometime back I had been to the Saraswathi Mahal Library at Thanjavur and I was there for some days. I found that there is heavy work to be done there but the number of scholars and manuscript readers are inadequate. I was told that the emoluments and pay of the scholars there are very meagre. So, may I know from the Hon. Minister for Education whether their condition has been improved in the recent years?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த சரஸ்வதி மகால் நூல் நிலையத்திற்கு 1971–72-ம் ஆண்டுக் கணக்குப்படி மாநில அரசு ரூ. 58,822 உதவி நிதியாக அளித்து வருகிறது. அதைத் தவிர, தனியாக, ரூ. 20,000 புத்தகங்கள் வெளியிடு வதற்காக என்று மட்டும் அரசு மானியம் அளித்து வருகிறது. இதைத் தவிர, உதவி நிதியாக மத்திய அரசு ரூ. 15,000 அளித்து வருகிறது. மேற்கொண்டும் தேவைப்படுகிற நிலை இருக்குமானால், மேற்கொண்டும் ஆராய்ச்சியாளர்கள் தேவைப்படுமானால், அதற்கென்று இருக்கும் குழுவினர் அரசுக்கு எழுதியனுப்பினால் அது பற்றிப் பரிசீலித்துத் தக்க முடிவை அரசு எடுக்கும்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தமிழ்நாட்டின் பல இடங்களிலும் விஞ்ஞானம், மருத்துவம், இன்னும் பழைய வரலாறு பற்றிய பல முக்கியமான பழங்கால ஏட்டுச் சுவடிகள் சில இடங்களில் பரம்பரை

பரம்பரையாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. அவைகளை யெல்லாம் அரசு நேரடியாகவோ, அல்லது மாவட்ட ஆட்சியாளர் மூலமாகவோ வேண்டுகோள் விடுத்து, ஒன்று சேர்த்து அவைகளை ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் இருக்கிற பழஞ் சுவடிகளைத் திரட்டுகிற பணிகள் பண்நெடுங்காலமாகவே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பழஞ் சுவடிகளைச் சேர்த்து வைக்கின்ற பகுதி ஒன்று இருந்து வருகிறது. தனிப்பட்டவர்கள் அவர்களாகவே கொண்டுவந்து தருவார்களானால், ஏற்றுக்கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. சில பல இடங்களில் சில புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் இன்ன இடத்தில் இருக்கிற சுவடி வேண்டும் என்று கேட்கும்போது அந்த இடத்திலே கேட்டு வாங்கும் நிலை இருக்கிறது. அப்படித் திரட்டி வைக்கப்பட்டிருக்கிற நிலைமையில்தான் பழங்காலச் சுவடிகள் பல சரஸ்வதி மகாலுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

Inscriptions at Brahadeeswarar Temple, Thanjavur.

*103—*Q.* THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the valuable inscriptions traced by the Archaeological Survey of India at Brahadeeswarar Temple at Thanjavur ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூரில் உள்ள பிரகதீச்வரர் கோவில் செப்பு விமானத்திலுள்ள நான்கு கல்வெட்டுகள், மைசூர் தலைமைக் கல் வெட்டுக் கலை ஆய்வாளரால் படி எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கு. காமாட்சி : தஞ்சை பிரகதீச்வரர் ஆலயத்திலுள்ள சில கல்வெட்டுக்களில் அக் கோவிலுக்குரிய சொத்துக்களின் விவரங்கள் அடங்கி இருப்பதாகக் கூறப்படுகிறதே, அப்படியானால், அந்தச் சொத்துக்களை யெல்லாம் மேற்கொள்ள அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ? எவ்வளவு சொத்துக்கள் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன ? மற்றவை இன்னும் யார் யாரிடம் இருக்கின்றன என்ற தகவல் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த பிரகதீச்வரர் கோயிலின் மதிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன, அவற்றில் பல்வேறு சொத்து விவரங்கள் இருக்கின்றன என்று ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பு பதிப்பிக்கப்பட்டன. அவை யார்